வசந்த மலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2050 / ஆனி / **JUNE 2019**




## 32 ஆம் பேரவைத் தமிழ் விழா

## சிகாகோ தமிழ்ச்சங்கப் பொன்விழா

**தமிழமுது பருக... தமிழின்பம் பெருக... அனைவரும் வருக...**



GTEN
Global Tamil Entrepreneurs Network
06TH JULY 2019
One day event that fosters entrepreneurship among members of Tamil Community
SCHAUMBURG CONVENTION CENTER
SCHAUMBURG, IL, USA
ATEA
BENEFITS
• Get insights from the industry's most well-known entrepreneurs, subject matter experts & digital transformation leaders
• Connect with the elite entrepreneurial group of Global Tamil Community
• The latest technological revolutions & how it influences our lives & businesses
• Winning Business in turbulent times
• Stories to inspire & empower Startups & Investors
KEY HIGHLIGHTS
• Agrotech
• Block Chain, IOT, AI, AR, Machine Learning, Automation
• Mentor Connection • US immigration
• Business Connection (Vendor Franchise)
• Capital opportunity for entrepreneurship
• Alumni Networking • Healthcare
• Panel Discussions & Startup Pitching
• Connecting Global Tamil Chambers of Commerce
• Opportunities in Government sector
• Women in Entrepreneurship
• Global Education & Human Development
உலகத் தமிழ் தொழில்முனைவோர் கூட்டமைப்பு
GTEN is a part 10th World Tamil Conference
For details, Please Contact:
Siva (847) 323-3015
Pitch (248) 797-8212
gtenchicago@gmail.com
http://www.gten.global/
For Registration:
http://registration.fetna.org

# பேரவைத் தலைவரிடமிருந்து...



அன்பான தமிழ் மக்களே, வணக்கம் !

அருவியின் வசந்த மலர் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இந்த ஆண்டு உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றமும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், சிகாகோ தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் "முப்பெரும் விழா" வரும் சூலைத் திங்கள் 4 முதல் 7 வரை (திருவள்ளுவர் ஆண்டு 2050, ஆடவை 19 முதல் 22 வரை) நடைபெறவுள்ளது என்பது நீங்கள் அனைவரும் அறிந்த செய்தி.

சிகாகோ நகரில் 10 ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடும், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 32 ஆவது தமிழ்விழாவும், சிகாகோ தமிழ்ச்சங்கப் பொன்விழாவும் சேர்ந்து முப்பெரும் விழாவாக நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் 130 ஆய்வுக் கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் தொடங்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மன்றம் இதுவரை ஒன்பது உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை தமிழ்நாடு, மலேசியா, பிரான்சு, இலங்கை, மொரீசியசு எனப் பல நாடுகளில் நடத்தியுள்ளது. முதன் முறையாக வட அமரிக்காவில், சிகாகோ நகரில் இந்த ஆண்டு, பேரவையின் தமிழ்விழாவோடு இணைந்து நடைபெறுகிறது நம் அனைவருக்கும் பெருமைக்குரிய செயல்.

பேரவை விழாவிற்கு, https://fetnaconvention.org/register/ என்ற இணைப்பு வாயிலாக பதிவு செய்யலாம்.

முப்பெரும் விழாவினைச் சிறப்பாக நடத்தி முடிக்க இரவு பகல் பாராமல் உழைக்கும் நூற்றுக்கணக்கான தன்னார்வலர்களை பேரவையின் சார்பாக பெரிதும் பாராட்டுகின்றேன். இந்த அமைப்பு முழுவதும் தன்னார்வலர்களால் இயக்கப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்த பாராட்டுக்குரிய செய்தி. எப்போதும்போல் இந்த ஆண்டும் பேரவை விழாவில் பல புதுமையான முன்னெடுப்புகள் இடம்பெறவுள்ளன.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பெருமளவில் தமிழ் உறவுகள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. மிகுந்த பொருட்செலவில், மாபெரும் உழைப்பில், கூரிய திட்டமிடலுடன் தமிழர் கலை, பண்பாடு, அரசியல், வரலாறு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. சிறப்பு விருந்தினர்கள் பல துறைகளில் இருந்து அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை தாங்கள் அனைவரும் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள்.

"கீழடி நம் தாய்மடி" எனும் கருப்பொருளில் நடைபெறும் தமிழ்விழாவில் அருவி மலரின் வாசகர்கள் அனைவரும் தங்கள் குடும்பம், உறவினர், நண்பர்களோடு கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

**சுந்தர் குப்புசாமி,** தலைவர்,

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

## வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை செயற்குழு

தலைவர்
திரு. சுந்தர் குப்புசாமி





செயலர்
திரு சுந்தரபாண்டியன் சபாபதி



துணைத் தலைவர்
திரு. கால்டுவெல் வேள்நம்பி



இணைச் செயலர்
திரு. சச்சிதானந்தன் வெங்கடகிருஷ்ணன்



பொருளாளர்
திரு. விஜயகுமார் தேவராஜ்

## வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை இயக்குனர் குழு

திருமதி. விஜி அழகர்





திரு. நம்பிராஜன் வைத்திலிங்கம்



திரு. இளங்கோவன் தங்கவேலு



திரு. சிவா வேலுபிள்ளை

# ஆசிரியர் கடிதம்



அருவி வாசகர்களுக்கு அன்பான வணக்கங்கள்.

இந்த வசந்த மலரை, நமது சங்கங்களின் நிகழ்வுகள் குறித்தச் செய்திகளோடு, சிகாகோ நகரில் சூலை முதல் வாரத்தில் நடக்கவுள்ள பேரவையின் முப்பெரும் விழாவிற்கான சிறப்பு மலராகவும் உங்களை அடையச் செய்வதில் ஆசிரியர் குழு பெருமகிழ்ச்சியடைகிறது.

கடந்த சில மாதங்களில் நமது சங்கங்கள், வசந்தத்தின் வாசம் மணக்கும் பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளன. சித்திரைத் திருவிழாக்கள், சங்க காலம் முதல் இன்று வரையிலான பாடல்கள் அடங்கிய இசை உலா நிகழ்ச்சிகள், இசைச் சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள், நகைச்சுவை நாடகங்கள், தமிழ் மரபிசை, பாரம்பரிய நடனங்கள், பறையிசை நிகழ்ச்சிகள், கூட்டுக்கும்மி, கைச்சிலம்பு நடனம், ஐயனார் நையாண்டி மேளம், சித்திரை கலாட்டா, தமிழ்ப் பள்ளி ஆண்டு விழாக்கள், 65 வகை பசி தூண்டிகளுடனான நளபாக விருந்து, கூட்டாஞ்சோறுடனான அன்னையர் தினம் மற்றும் உலக மகளிர் தினக் கொண்டாட்டங்கள், அன்னையரின் சிறுவயது மற்றும் வளைகாப்புப் புகைப்பட விளக்கக் காட்சிகள், அனைத்து வயதினருக்குமான பல விளையாட்டுப் போட்டிகள், மருத்துவ முகாம்கள், இளம் தலைவர்கள் பயிற்சிப் பட்டறைகள், வாழையிலை விருந்து, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சிகள் என ஒவ்வொரு சங்க நிகழ்வுகளும் நம் செவிக்கும், உணர்விற்கும் இனிதான செய்திகள்.




இளம் தலைமுறையினருக்கு தமிழில் சுவையார்வமூட்டும் வகையிலான திருக்குறள் தேனீ, திருக்குறள் கதைப் போட்டிகள், வில்லுப்பாட்டு, கோலாட்டம், நாடகங்கள், உயிரெழுத்துப் பாடல், தமிழ் உச்சரிப்புப் போட்டி, இளம் சாதனையாளர்களை தேர்ந்தெடுத்து மேடையில் ஊக்கப்படுத்துதல் எனப் பற்பல சிறப்பான நிகழ்ச்சிகள்..!

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக, பல சங்கங்களின் நிகழ்ச்சிகளில் பங்குபெறும் தமிழ் குடும்பங்கள் மற்றும் தமிழ் இளையோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வரும் செய்திக் குறிப்புகள் தமிழரின் ஒற்றுமைக்கும், கூடிச் செயலாற்றும் திறன் பெருகி வருவதற்கும் பெருமைக்குரிய சான்றுகள்..

பேரவையின் 32-ஆவது ஆண்டு விழா, உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு மற்றும் சிகாகோ தமிழ்ச்சங்கத்தின் பொன்விழா அனைத்தும் இணைந்த முப்பெரும் விழா சிறப்புற நடத்திட, அல்லும், பகலும், ஆதியிலும், அந்தியிலும் முந்தி நின்று, பல்வேறு மாநிலங்களிலிருந்தும், அயராது பணியாற்றிவரும் தன்னார்வலரின் உழைப்பினைப் போற்றும் வகையிலும், பேரவைத் தலைவர் மற்றும் விழா ஒருங்கிணைப்பாளர்கள் தங்களது கடிதங்களில் கேட்டுக்கொண்டுள்ளது போலவும், உங்கள் உறவு நட்புக்களோடு, பெருமளவில் திரண்டு வந்து, அரங்கம் நிறையச் செய்து, ஆதரவளிக்க அருவிக் குழு அன்போடு கேட்டுக்கொள்கிறது.

இந்த வசந்த மலருக்குக் கட்டுரைகள் வழங்கிய தமிழ்ச்சங்கச் செயற்குழுக்களுக்கும், காலத்தே தொகுத்துக் கொடுத்த அருவி ஆசிரியர் குழுவிற்கும் நன்றிகள் பல. அடுத்து வரவிருக்கும் மலரில் மீண்டும் சந்திப்போம்.

அன்புடன் **இளங்கோவன் தங்கவேலு**

அருவி ஆசிரியர்

செயின்ட் லூயிஸ், மிசௌரி.

**உங்களுக்குத் தெரியுமா?**

1) மதுரை-இராமேச்சுரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இந்தச் சிற்றூரின் பூமிக்கு அடியில் ஒரு நாகரிகமிக்க நகரமே புதையுண்டு கிடைப்பதைத் தொல்லியல்துறையினர் கண்டறிந்துள்ளனர்..

அ) கீழடி பள்ளிச்சந்தை. ஆ) சிலைமான் இ) கீழடி ஈ) திருப்புவனம்

# சிகாகோ முப்பெரும் விழா 2019 - விழா ஒருங்கிணைப்பாளர் மடல்.



அன்புடையீர்,

வணக்கம். “மொழி உணர்ச்சி ஓரினத்தின் முதல் உணர்ச்சி” என்ற உவமைக் கவிஞர் சுரதாவின் கூற்றிற்கேற்ப, நம் மொழி நம் உணர்விலும் உதிரத்திலும் கலந்துள்ளது. நம் உள்ளத்திலும் உதிரத்திலும் இணைந்துள்ள நம் அன்னைத்தமிழின் பெருமை, புகழ், நம்மினத்தின் வரலாறு அமெரிக்க மண்ணில் எதிரொலிக்க நாம் எடுக்கும் முயற்சி பத்தாம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு.

இம்மாநாடு அனைத்துலகத் தமிழாய்வு மன்றம், வடஅமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவை, சிகாகோ தமிழ்ச்சங்கம் மற்றும் பேரவையின் உறுப்பினர் சங்கங்கள் முன்னெடுப்பில், தன்னார்வ தொண்டர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஒருங்கிணைந்த பெருவிழாவாக நடைபெறவுள்ளது. சிகாகோ பெருநகரம் இவ்விழாவினை எதிர்நோக்கி காத்துள்ளது. ஊர் கூடியுள்ளது, ஊர் கூடியுள்ளது என்பதை விட உலகம் கூடியுள்ளது என்பதே மிகப்பொருத்தமானதாக அமையும். இம்மாநாட்டிற்கான பணிகள் கடந்த ஆண்டில் தொடங்கி செயல் வேகம் பெற்றுள்ளது. பணிகளின் தொடக்கம் பல்வேறு குழுக்கள், குழுக்களில் உலகெங்கும் இருந்து வந்த தொண்டர்கள் என அருமையாக ஆரம்பிக்கப்பட்டது. அருமையாகத் தொடங்குவதே அரை வேலை முடிந்தது என்பதன் பிரதிபலிப்பு. இதனை உணர்ந்த நம் முன்னோர் “விளையும் பயிர் முளையிலேயே தெரியும்” என்று உரைத்தனர்.

இதுவரை, தன்னார்வ தொண்டர்கள் நிரம்பிய பல்வேறு அணிகள் தாங்கள் ஏற்றுள்ள பொறுப்பினை, பணிகளை நாள்தோறும் செய்து வருகின்றனர். இவற்றில் விழா நிகழ்ச்சி வடிவமைப்பு, விருந்தினர்கள் அழைப்பு, திறன் போட்டிகளின் தேர்வுச்சுற்றுக்கள், பரப்புரை என பல பணிகளில் முன்னேற்றம் வளர்ந்து வருகிறது. உலகெங்கும் பரவியுள்ள தமிழர்கள், தமிழறிஞர்கள், தமிழ் அமைப்புகள் தொடர்பு கொள்ளப்பட்டு அவர்களின் வருகை, பங்களிப்பிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. விழா பற்றிய செய்திகள் புலனூடகம், கருவி ஊடகம், அலை ஊடகம் போன்றவற்றின் வாயிலாகத் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன.

விழாவிற்கான முன்பதிவுகள் பல்வேறு திசைகளிலிருந்தும், நாடுகளிலிருந்தும் வந்த வண்ணம் உள்ளன. இன்று இந்த மாநாட்டிற்கான பணிகளின் செயல்வேகம் அதிகரித்து வருகிறது. சீரிய செயல்களின் வேகம், வெளிப்பாடு இம்மாநாடு நாளை சரித்திரம் படைக்கும் என்பது பேருண்மையாகும்.

இம்மாநாட்டின் வாயிலாக தமிழின் தலைச்சிறந்த அறிஞர் பெருமக்கள் தமது ஆய்வினை நமக்கும் உலகத்திற்கும் அளிக்கவுள்ளனர். இந்த ஆய்வுகள் நம் மொழியின் செழுமையை உரைப்பதுடன், புதிய மெய்ப்பொருட்களையும், முன்னர் இருக்கும் மெய்ப்பொருட்களை வலுப்படுத்தும் வகையில் இருக்கப்போகின்றது. இத்தகைய அரிய ஆய்வுப்படைப்புகளை, ஆய்வறிஞர்களை நாம் ஆதரிப்பது நம் மொழிக்கும், நம் இனத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளாகும். உலகெங்குமுள்ள அறிஞர்களை ஒன்றிணைகின்ற இந்த நிகழ்விற்குப் பொருள் சேர்ப்பதும், ஆதரவு திரட்டுவதும் நம் கடமையாகிறது. தமிழிற்கு அணி செய்கின்ற நிகழ்வில் பங்கேற்கின்ற மாநாட்டில் ஆய்வறிஞர் வருகை, அவர்களது பயணச்செலவு போன்ற பல்வேறு பொருட் செலவுகளுக்கான கொடையாளர்களை எதிர்நோக்கியுள்ளோம் . நமது விழா இணையதளத்தில் இதற்கென தனிப்பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலாக தாங்கள் கொடையளிக்க வேண்டுகிறோம்.

சிந்தனையைத் தூண்டும் ஆய்வரங்குகள் மட்டுமல்லாது நம் தமிழர் மரபு போற்றும் கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், தொழில் முனைவோர் கூட்டமைப்பின் கருத்தரங்கம், தமிழர் பல்பொருள் அங்காடிகள் என பல்வேறு பகுதிகளாக அமையவுள்ளது. இந்த விழா உலகத்தமிழர் அனைவரும் பெருமை கொள்ள மகிழ்ச்சியடைய, ஏற்றம் பெறும் ஒரு பெருவிழா! திருவிழா! இந்த விழாவில் தாங்கள் நட்பு சூழ குடும்பத்தினருடன் பங்குகொள்ள வேண்டுகின்றோம்! அழைக்கின்றோம்! வருக! வருக!

**வீரா வேணுகோபால்**
விழா ஒருங்கிணைப்பாளர்

2) தமிழகத்தில் கிடைக்கும் பிராமி எழுத்திற்கு "தமிழி" என்று பெயரிட்டவர் நாகசாமியாவார். இதனை "தொன்மைத் தமிழ் எழுத்துக்கள்" என நடன காசிநாதன் மற்றும் சு.இராசவேல் போன்றோர் குறிப்பிடுகின்றனர். "தமிழ் பிராமி" என்று பெயரிட்டவர் யார்?

அ) ஐராவதம் மகாதேவனாவார். ஆ) சிலம்பொலி செல்லப்பன் இ) தேவநேயப்பாவாணர் ஈ) கவிஞர் சுரதா.

# சிகாகோ முப்பெரும் விழா 2019 பணிகள் - ஒரு பார்வை



தமிழர் வரலாற்றில் ஒரு முத்திரை பதிக்கும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. முத்தமிழ், முக்கனி, மூவேந்தர் வரிசையில், சிகாகோவில் வரும் ஜூலை 4 முதல் 7 ஆம் நாட்களில் 10 ஆம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு, வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 32 ஆம் தமிழ் விழா, சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா என முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழா சீரோடும் சிறப்போடும் நடந்திட, வடஅமெரிக்கத் தமிழ்சங்கப் பேரவையுடன் இணைந்து தோளோடு தோள் கொடுத்து சிகாகோ தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர்களும் தன்னார்வத்தொண்டர்களும் உழைத்துவருகின்றனர். அனைவரின் பங்கும் மிளிர்ந்திட, சிரமமின்றி நடந்திட பல குழுக்களை உருவாக்கி பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ன. ஒவ்வொரு குழுவிலும் செயல் வீரர்கள் அனைவரும், உலகம் வியக்கும் அளவுக்கு வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு அரும் பணியாற்றி வருகின்றனர். இன்றைய நிலையில், 35 க்கும் மேற்பட்ட குழுக்கள், 400 க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் என ஆர்வத்துடன் செயல்பட்டு வருகின்றனர். நாட்கள் நெருங்க நெருங்க, மேலும் பல குழுக்களும் அமைக்கப்படும்.

நிறைந்த நீரோடு வளைந்தோடும் நதிகள் வளமார்ந்த தமிழகத்தின் செல்வங்கள். கரும்பிடைத் தேனும், கடைமடை வாளை மீனும், கன்னியர் பறித்துவரும் செங்கழுநீர்ப் பூவும், கழனியில் உழுவோர் கண்டெடுத்த ஆமைகளும், காவிரியின் நீர்ப் பெருக்கால் திகழ் சோழ வளநாட்டை ஆட்சி புரிந்தவர் கரிகாலச் சோழர். 2000 ஆண்டுகளுக்கு முன்பு, அவர் கட்டிய "கல்லணை" தமிழன், தொன்மைக்காலத்தில் தொழிற்நுட்ப அறிவில் சிறந்திருந்தான் என்பதற்கு அடையாளம். இன்றும் உலகம் வியக்கும், தமிழனின் தொழிற்நுட்ப அறிவின் சின்னமான, சிறப்போடும் வலிமையோடும் இன்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் கல்லணையின் மாதிரி வடிவம் விழாவின் முகப்பில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளது.

தமிழின் தொன்மையையும் தமிழனின் நகர நாகரீக முதிர்ச்சியையும் பறை சாற்றுகின்றன கீழடியில் நடைபெறும் தொல்பொருள் ஆராய்ச்சிகள். "கீழடி நம் தாய்மடி" என்பதே உலகத் தமிழாராய்ச்சி கருத்தரங்கின் கருப்பொருள். கீழடியின் மாதிரி வடிவமும் காட்சிக்கு அமைக்கப்படவுள்ளது.

பொன் ஒலி சேர் மாலையணிந்து, மின்னொளியாய் வாள் வீசி, மண் மீது மாற்றார் படை அழிக்கும் திண் தேர் மன்னன் இராஜேந்திர சோழன், தமிழ் உலகு புகழ் சோழ மன்னர் ஆவார். 11 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த மன்னரான இராஜேந்திர சோழர், வடக்கே கங்கை வரை படையெடுத்துச் சென்று அங்குள்ள மன்னர்களை வீழ்த்தி தன் பேரரசை நிறுவி 1000 ஆண்டுகள் ஆகின்றன. கப்பற்படை அமைத்து தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றை வெற்றி கொண்டு தமிழரின் வீரத்தை உலகுக்குக் காட்டிய மாவீரர் இராஜேந்திர சோழரின் வரலாறு நாடகமாக அரங்கேறவுள்ளது. அதில் தமிழ் நாட்டிலிருந்து வரும் கலைஞர்களோடு, இங்குள்ள கலைத்திறன் மிகுந்த தமிழ்ச்சங்க உறுப்பினர்களும் பெருமளவில் பங்கேற்பர்.

உலகப்பொதுமறை தந்து தமிழனின் அறிவாற்றலை உலகுக்கு உரைத்த பொய்யாமொழிப்புலவர் சிலை அமெரிக்காவில் நிறுவிட வேண்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் தமிழ் நாட்டின் சிறப்புமிகு விஜிபி குழுமம், திருவள்ளுவர் சிலையை நன்கொடையாக கொடுத்துள்ளது. தமிழின் பண்டைய இலக்கியங்கள் முதல் இந்நாள் இலக்கியங்கள் வரையிலான நூல்கள், ஆராய்ச்சிக்கட்டுரைகள், அறிஞர்களின் அரிய படைப்புகள், மாதாந்திர இதழ்கள், செய்திமலர்கள், ஒலி நாடாக்கள் என 4 இலட்சத்திற்கும் மேற்பட்டவைகளை தன்னகத்தே கொண்ட "ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்", அரிய நூல்களைக் காட்சிப்படுத்தவுள்ளது. குறிப்பாக திருக்குறளின் முதன் முதல் பதிப்பு நூலை காட்சிப்படுத்தவுள்ளார்கள்.

தமிழனின் தொன்மையான இசை பறை. தொன்மையை பேணி பாதுகாப்பது நமது இயல்பு. சிகாகோ பொன்விழாவை வெளிப்படுத்தும் ஒருமுகமாக "பொன் பறை" இசைக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. 50 பேர் தங்கள் உணர்வையும் திறமையையும் வெளிப்படுத்தி விழா அரங்கில் இசைக்க பயிற்சி எடுத்து வருகின்றனர்.

இன்றமைந்தது இன்றே தீர்ந்ததென நில்லாது, தமிழின் பெருமையும் வளமையும் மனித இனம் உள்ளவரை நிலைக்கவேண்டும் என்பதால், நாம் செய்கின்ற பணிகள் யாவும் அடுத்த தலைமுறைக்கும் சென்றடைய வேண்டும் என்பதில் சிகாகோ தமிழ்ச்சங்கம் உறுதியுடன் இருக்கிறது. இளையோருக்கு தமிழ் உணர்வு ஊட்டுவதும், தமிழ் அறிவை மேம்படுத்துவதும், அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதும், தமிழ்ப் பணிகளில் ஈடுபடுத்துவதும் முக்கியச் செயலாகும். அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்காக பல போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகளில் பங்கெடுத்துக்கொள்ள பெரும் எண்ணிக்கையில் முன்வந்துள்ளார்கள். அதற்காக இளையோர் கடும் பயிற்சி செய்து வருகிறார்கள்.

உங்கள் 2019 கோடை விடுமுறையின் சூலைத்திங்கள் முதல் வாரத்தினை, சிகாகோவில் உங்கள் தமிழ் உறவுகளுடன் கொண்டாட அன்புநிறை ஆர்வத்துடன் அழைக்கிறோம்! உங்கள் மனம் நிறை ஆதரவை அன்புடன் மீண்டும் வேண்டுகிறோம்!

**மணி குணசேகரன்**

முதன்மைப் பணியாளன், சிகாகோ தமிழ்ச்சங்கம்

**3) கீழடியில் பெருமளவில் தமிழ்பிராமி எழுத்துகள் பதித்த எந்தப் பொருட்கள் கிடைத்துள்ளன?**

அ) மட்பாண்ட சில்லுகள். ஆ) கருங்கற்கள் இ) தங்கக் கட்டிகள் ஈ) சுடுமண் பொம்மைகள்







## தென் பூவகத் தமிழ்ச்சங்கம்

தென் பூவகத் தமிழ்ச்சங்கத்தின் 'சித்திரைப் பெருவிழா' நிகழ்ச்சி, ஏப்ரல் 20 ஆம் நாளில், வண்ணமயமான பள்ளி அரங்கத்தில், இசை, நடனம், பேச்சரங்கம், வில்லுப்பாட்டு, திறமையான "கதக்" நடன நிகழ்ச்சி மற்றும் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல "பேன்டோமைம் /மைம்" நிகழ்ச்சி எனப் பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளுடன் சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாகச் சிறப்பாக நடந்தேறியது. இந்த நிகழ்ச்சி மூத்த குடிமக்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. சுவையான இரவு விருந்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவேறியது.

4) கீழடி நகரம் மண்ணுக்கடியில் புதையுண்ட காரணமாகக் கருதப்படுவது?

அ) பூகம்பம் ஆ) சுனாமி இ) ஆற்று வெள்ளம். ஈ) எரிமலை





## ஆல்பெநீ தமிழ்ச்சங்கம்

ஆல்பெநீ தமிழ்ச்சங்கத்தின் சித்திரைத் திருவிழா, ஏப்ரல் 27 அன்று இந்து பண்பாட்டு மையத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவிற்கு 450-க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் வந்திருந்தனர். 22 நிகழ்ச்சிகளுடன் நடந்த இவ்விழாவில் குழந்தைகளுக்காக சோளப் பொறி மற்றும் பஞ்சு மிட்டாய் வழங்கப்பட்டன. மேலும், மகளிருக்காக, பூக் கடையும் அமைக்கப்பட்டது. எங்கள் உணவுக் குழு, “வசந்த பவன்” பாணியில், சுவையான உணவினை, பாக்கு மட்டை தட்டில் வெற்றிலை மற்றும் வாழைப்பழத்துடன் பரிமாறினர்.




## நியூ யார்க் தமிழ்ச்சங்கம்

ஏப்ரல் 27, 2019 அன்று நியூ யார்க் தமிழ்ச்சங்கத்தில், புகழ்மிக்க வாய்ப்பாட்டு இசை வித்தகர் சிக்கில் குருச்சரண் நடத்திய ‘இசை உலா’ நடைபெற்றது. சுருதி சாரதி வயலின் இசைக்க, விஜய் கணேஷ் மிருதங்கம் வாசிக்க, சிக்கில் குருச்சரண் வழங்கிய ‘சங்க காலம் முதல் இன்று வரை’ பல நூற்றாண்டுகளின் வரிசையில் தமிழ் இசையின் பயணம், இதுவரை யாரும் நிகழ்த்தாத ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது! அவரது ஆழ்ந்த தமிழ் இலக்கிய அறிவும், அதனை நேர்த்தியாக பாடல்களில் அளித்த திறமும் கண்டு அனைவரும் வெகுவாகப் பாராட்டியதோடு, தமிழ்ச் சங்கத்தின் இந்த புது முயற்சியினையும் மனதார வரவேற்றனர்.

## நியூ ஜெர்ஸி தமிழ்ச்சங்கம்

இந்த ஆண்டு நியூ ஜெர்ஸி தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்த சித்திரைத் திருவிழா, ஐயா “இசைக்கவி” இரமணன் அவர்களின் இசைச் சொற்பொழிவுடன் இனிதே துவங்கியது. “மொழியழகி” திருமதி. பர்வீன் சுல்தானா அவர்களின் “உயரப் பழகுவோம்” என்ற சொற்பொழிவில் திளைத்து, “நகைச்சுவைத் தென்றல்” திரு. மோகனசுந்தரம் அவர்களின் “சிரிக்கப்பழகுவோம்” என்ற தலைப்பில் அமைந்த நகைச்சுவை வெள்ளத்தில் மூழ்கி, ஐயா “சொல்லின் செல்வர்” சுகி சிவம் அவர்களின் “இரசிக்கப் பழகுவோம்” என்ற கருத்தாழம் மிக்க உரையினில் இலயிக்க வைத்த மாலைப்பொழுதாய் விழா அமைந்தது. இவ்வளவு அருமை பொருந்திய கொண்டாட்டங்களுக்கு முத்தாய்ப்பாய் அமைந்தது நியூ ஜெர்ஸி தமிழ்ச் சிறார்கள் நடித்து வழங்கிய “வேள்பாரி ஓர் அறிமுகம்” என்ற குறுநாடகம்.



**5) “வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட் துறை” என்ற சுந்தரர் பாடலில் குறிப்பிடப்படும் அக்காலத் தென்பெண்ணை ஆறு இன்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) அரசலாறு ஆ) கல்லாறு இ) மலட்டாறு ஈ) சிற்றாறு







## சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம்

மார்ச் 23 ஆம் தேதி சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம், இந்தியா அசோஸியேஷன் ஆப் சான் ஆண்டோனியோ மற்றும்' குழந்தைகளின் உரிமையும் நீங்களும்' எனும் அமைப்பு இவை அனைத்தும் இணைந்து, வண்ணமயமான 'ஹோலிப்பண்டிகை' கொண்டாடப்பட்டது. ஏப்ரல் 14, தமிழ் வருடப்பிறப்பன்று, தமிழ்ச்சங்கத்தின் 'மல்லிகை மலர்' 2019-ன் முதல் பதிப்பு வெளிவந்தது. ஏப்ரலில் பத்து நாட்கள் நடந்த ஃபியஸ்டா திருவிழாவில், சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் பாரம்பரிய நடனம் வழங்கிச் சிறப்பித்தது. ஏப்ரல் 27-ஆம் தேதி, சித்திரைத் திருவிழா, சிறந்த கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

## அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கம்

அர்கன்சாஸ் மாகாணத்தின் தலைநகர் லிட்டில்ராக் நகரில் தமிழ்ப் புத்தாண்டு விழா அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கம் சார்பில் ஏப்ரல் 13, 2019-ல் கொண்டாடப்பட்டது. தமிழ் கல்வி மற்றும் கலாச்சார மையம் ஆசிரியர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவினை துவக்கி வைத்தார்கள். திரு மீனாட்சி வள்ளிநாயகம் அவர்கள் இறைவணக்கம் பாடினார். தலைவர் திரு. மகிழ் இராஜேந்திரன் வரவேற்றுப் பேசினார். பின்னர் தமிழ் கல்வி மற்றும் கலாச்சார மையம் மாணவர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்ற. நிகழ்ச்சிகளை செல்வி நிவேதா மற்றும் தமிழ்க் கல்வி கலாச்சார மைய ஆசிரியர்கள் தொகுத்து வழங்கினர். நிறைவில் செயலாளர் திரு மீனாட்சி வள்ளிநாயகம் நன்றி கூறினார்.









## ரிச்மண்ட் தமிழ்ச்சங்கம்

ஏப்ரல் 27 அன்று, ரிச்மண்ட் தமிழ்ச்சங்கத்தின் வருடாந்திர குழந்தைகள் கலாச்சார விழா கோலாகலமாக நடைபெற்றது. அதில் 200-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வருகை தந்ததோடு, 200-க்கும் மேற்பட்ட குழந்தைகளும் பங்கேற்று, பல நிகழ்வுகளை நடத்தி அவர்தம் திறமைகளை வெளிப்படுத்தினர். அனைத்து நிகழ்ச்சிகளும் தமிழ்ப் பண்பாட்டினை அடிப்படையாக கொண்டு அமைந்திருந்தது சிறப்பாக இருந்தது. மேலும், 3 இளம் சாதனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர். வந்திருந்த அனைவருக்கும் சுவையும், சத்தும் நிரம்பிய சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.



**6) கீழடிக்கு அருகில் உள்ள மாரநாடு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சிலை என்னவென்று ஊர்மக்கள் அழைக்கின்றனர்?**

அ) முனியாண்டி. ஆ) திருவள்ளுவர் இ) ஐயனார் ஈ) புத்தர்.






## வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் சித்திரை விழா, ஏப்ரல் 28 ஞாயிறு அன்று வாழையிலை விருந்துடன் சிறப்பாக நடந்தேறியது. விழாவில் சிறப்பு அழைப்பாளர் திரு. இசைக்கவி இரமணன் அவர்களின் சொற்பொழிவு மிகவும் சிறப்பாக அமைந்தது. முளைப்பாரி ஊர்வலம் தமிழ் மரபிசை முழங்க மேடையேறியது. தமிழ்ப்பள்ளி மாணவ மாணவியர்கள் உயிரெழுத்து, மெய்யெழுத்துக்களை நினைவில் வைக்க எளிமையான 2 பாடல்களை உள்ளூர் இசையமைப்பாளர் திரு. அபிசேக் ஜெயகுமார் அவர்களின் உதவியுடன் தமிழ்ச்சங்கம் வெளியிட்டது. உயிரெழுத்துப் பாடலுக்கு நடனமும் திருமதி சுபா இரவி அவர்களால் அரங்கேறியது.








## ஹாரிஸ்புரம் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

பங்குனி மாதம் 23-ஆம் நாள் (ஏப்ரல் 6), சங்கத்தின் முதல் நிகழ்ச்சியான சித்திரைத் திருவிழாவில், இசை, பாடல், மற்றும் நடனங்களுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் விருந்தினர்களை களிப்புறச்செய்தன. கடந்த ஆண்டு இச்சங்கத்தில் தன்னார்வலராய் பதவி வகித்து பங்காற்றிய நண்பர்கள் கௌரவிக்கப்பட்டனர். இச்சங்கத்தின் மூலம் சிறார்க்கு நற்தமிழ் கற்றுத்தரும் ஓர் தமிழ்ப்பள்ளி வாரந்தோறும் நன்மை பயக்க இயங்கி வருகிறது. வருடந்தோறும் பென்சில்வேனியா உணவு வங்கிக்கு பொருள் ஆதரவளிப்பதும், சாலை சீரமைப்பு பணியில் ஈடுபட்டு பங்களிப்பதும் இச்சங்கத்தின் செயல்பாடுகளில் சிலவாகும்.








## கொலம்பஸ் தமிழ்ச்சங்கம்




கொலம்பஸ் தமிழ்ச்சங்கம் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் சதுரங்கம், கோலம், திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி ஒப்புவிப்பு எனப் பல போட்டிகளை நடத்தி ஏராளமான பரிசுகளை வாரி வழங்கிச் சிறப்பித்தது. தமிழர்களின் பாரம்பரியக் கலைகளின் சங்கமமாக மயிலாட்டம், ஒயிலாட்டம், பாம்பாட்டம், கரகாட்டம் எனப் பல கலைகளை, உள்ளூர் கலைஞர்கள் நிகழ்ச்சி மற்றும் கனெக்டிக்கட் மானுடம் பறைக் குழுவினரின் பறையையும் சேர்த்து மிகச் சிறப்பாக நடத்தி அனைத்துத் தமிழர்களையும் மகிழ்வித்துப் பெருமைப்படுத்தியது.

**7) வைகை நதியின் எந்தப் புறத்தில் அதிக அளவிலான தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன..**

அ) கிழக்கு ஆ) மேற்கு இ) வடக்கு ஈ) தெற்கு.




## சிகாகோ தமிழ்ச்சங்கம்

சிகாகோவில் வரும் ஜூலை 4 முதல் 7 ஆம் நாட்களில் நடைபெறவுள்ள முப்பெரும் நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்திடப் பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் 7 ஆம் நாள், “மூன்றாம் திட்டமிடல் கூட்டம்”, ரோலிங் மெடோவ்சில் நடைபெற்றது. சிகாகோ தமிழ்ச்சங்கத்தை, சிறு விதையிலிருந்து ஆல் போல் வளர்த்த சங்க முன்னோடிகளுக்கு அழைப்புவிடுத்து, விருந்தளித்து (CTS50 Luncheon), பெருமைப்படுத்தி, அவர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டன. மகளிர் அணி சார்பாக, ஏப்ரல் 6 ஆம் நாள் சாம்பர்கில் நடந்த சமையல் போட்டியில் 20 குழுக்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. இதன் மூலம் திரட்டப்பட்ட நிதி, பார்வையற்றோருக்காக, உடல் நலம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக “பார்வையற்றோர் எழுத்துமுறை (பிரெய்ல்)” புத்தகம் வெளியிடவும், அவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடத்தவும் $1400 நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## கனடியத் தமிழர் பேரவை

கனடியத் தமிழர் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட 10 ஆவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மே மாதம் 15 ஆம் திகதியன்று கனடிய தமிழர் பேரவையினால் கனடிய பாராளுமன்ற வளாகத்தில் நடத்தப்பட்டது. இருபதுக்கும் அதிகமான கனடிய அமைச்சர்கள், மத்திய பாராளுமன்றத்தின் பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். கனடியத் தமிழர் பேரவையின் தலைவர் திரு சிவன் இளங்கோ, அன்றைய மற்றும் தற்போதய நிலைகுறித்து உரையாற்றினார். கனடிய இசைக்கலைஞர் திரு வர்ணா ராமேஸ்வரம் அவர்களால் முள்ளிவாய்க்கால் அவலங்களைக் கூறும் பாடலொன்று இசைக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் அஞ்சலி நிகழ்வாக எல்லோரும் மலரஞ்சலி செலுத்தினார்கள்.










## மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம்

மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம் சார்பில் சித்திரைத் திருவிழாவா, கடந்த ஏப்ரல் 27 ஆம் தேதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதில், ஒய். ஜி. மகேந்திரா அவர்களின் குழுவினால் வட அமெரிக்காவிலேயே முதன் முதலாக “ஆவி வந்த நாடகம்” அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, குழந்தைகளின் திருக்குறள் தேனீ போட்டிகளும், திருக்குறள் கதை சொல்லும் போட்டிகளும், ஓவியப் போட்டிகளும் நடத்தப்பட்டன. சென்ற மே 11 ஆம் நாளில் தமிழ்ப் பள்ளியின் ஆண்டு விழாவும், பள்ளி குழந்தைகளுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்குதல், மற்றும் வெற்றி பெற்ற மாணாக்கர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



**8) கீழடிக்கருகில் உள்ள இந்த ஊரில் தமிழ் பிராமி எழுத்துக்கள் பதிக்கப்பட்ட தங்கக் கட்டிகள் கிடைத்துள்ளன... அந்த ஊர்?**

அ) பாலூர் ஆ) தேனூர். இ) வெம்பூர் ஈ) அழகாபுரி



## கென்டெக்கி தமிழ்ச்சங்கம்



கென்டெக்கி தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்புக் கொண்டாட்டங்கள் கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் நாளில் லூயிவில் நகரில் உள்ள ஸ்ரீ சுவாமி நாராயணன் கோயில் வளாகத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றன. விழாவில் குழந்தைகளும் பெரியவர்களும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்று ஆடிப் பாடி தத்தம் திறமைகளை வெளிப்படுத்தினர். இம்முறை, சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெற்ற செயின்ட் லூயிசின் 'அமெரிக்கன் பறையிசை' குழுவின் பறையிசை நடனம், சிலம்பம், கூட்டுக்கும்மி, கைச்சிலம்பு நடனம், ஐயனார் நையாண்டி மேளம் என்று தமிழர்களின் பாரம்பரிய நடனங்கள், நம் தொல்கலை அடையாளங்களைப் பரப்பும் வகையில் அருமையாக அமைந்தன.


## மத்திய இல்லினாய் தமிழ்ச்சங்கம்



தமிழ்ப் புத்தாண்டு மத்திய இல்லினாய் தமிழ்ச்சங்கத்தினரால் ஆடல் பாடலுடன், சீரும், சிறப்புடனும் கொண்டாடப்பட்டது. சிகாகோ தமிழ்ச் சங்கத் தலைவர் திரு மணி குணசேகரன் வருகை தந்து ஜூலையில் சிகாகோவில் நடக்கவிருக்கும் பேரவை விழா மற்றும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சிறப்பைப்பற்றி உரையாற்றினார். கண்ணைக் கட்டிக்கொண்டு சிறுமியர் ஆடியதும், "எங்கம்மா ஜிம்மிக்கி கம்மல்" பாடலுக்கு மங்கையர் ஆடி அனைவரையும் மகிழ்வித்ததும் சிறப்பு. திரு. செங்குட்டுவன் தலைமையில் முதன் முறையாகப் புதுமையான தமிழ் உச்சரிப்புப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. முத்தைத்தரு பத்தித் திருநகைப் பாடலை பிழையில்லாமல் நல்ல உச்சரிப்புடன் பாடி முதல் பரிசை திருமதி சங்கீதா சரவணன் தட்டிச்சென்றார்.

## தென் மத்திய தமிழ்ச்சங்கம்





கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதியன்று தென் மத்தியத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் சித்திரைத் திருவிழாவான "சித்திரை கலாட்டா" எனும் நிகழ்ச்சி, மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பலகுரல் வித்தகரும், நகைச்சுவைக் கலைஞருமான படவா கோபி கலந்து கொண்டு அனைவரையும் மகிழ்வித்தார். மேலும் சங்க உறுப்பினர்களும் மற்றும் உள்ளூர் திறமையாளர்களும் கலந்து கொண்டு உற்சாகமாக ஆடல், பாடல் மற்றும் இசை நிகழ்ச்சிகளையும் நிகழ்த்தி மகிழ்வித்தனர். மே மாதம் 14 ஆம் தேதியன்று, சங்கத்தின் சார்பாக நடத்தப்படும் தமிழ்ப்பள்ளியின் ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக குழுவினர் கௌரவிக்கப்பட்டனர்.

**9) கீழடியில் கிடைத்த 7 தங்கக்கட்டிகளிலும் பொறிக்கப்பட்டிருந்த பெயர் என்ன?**

அ) போகுஇ குன்றிக் கோதை. ஆ) போகுஇ குன்றிக் குரவை இ) போகும் குன்றக் குரவை ஈ) பெருமாள் கோதை





## கேன்சஸ் மாநகர தமிழ்ச்சங்கம்

கேன்சஸ் நகரத் தமிழ்ச்சங்கம், ஏப்ரல் 27-ம் தேதியில் நடத்திய இந்த ஆண்டு "நளபாகம்" நிகழ்ச்சியில் நளன்கள் தங்கள் தமயந்திகளின் மனங்களைக் கவர எடுத்த புதிய முயற்சிகள் பல. இந்த வருடத்திய நளபாகத்தின் கருப்பொருள்: துடிப்பான பாரதம். பெயருக்கு ஏற்றார் போல், கும்பகோணம் சுக்கு காபி, மலபார் தேநீர் என்று உபசரிப்பில் ஆரம்பித்து, தாண்டை, பேபி சோளம் 65 முதலான பசிதூண்டிகளைத் தொடர்ந்து, பொடி இட்லி, மங்களூர் கொசம்பரி பச்சைக் காய்கறி கலவை, பம்பாய் பூரி என்று பல முக்கிய மற்றும் உப பதார்த்தங்களைச் சுவைத்து, பாதுஷா மற்றும் பழ கஸ்டர்டு என இனிப்பாக முடித்தோம். இம்முறை சில தமயந்திகளும் நளபாக நிகழ்ச்சியில் பல விதமான அலங்காரங்கள் செய்து வைத்து நமது? ஊர் திருவிழாக் கலையைக் கொண்டு வந்தது வெகு சிறப்பு!!







## அயோவா தமிழ்ச்சங்கம்

அயோவா தமிழ்ச்சங்கத்தின் சித்திரைத் திருவிழாவாக, ஏப்ரல் 20 ஆம் நாளில் நடந்தேறிய "முத்தமிழ்ச் சங்கமம்" விழாவில் 360-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். மினசோட்டாத் தமிழ்ச்சங்கப் பறைக் குழுவினரின் பறையாட்டம், சங்கக் குடும்பங்களின் நிகழ்ச்சிகள், இஷாஞ்சலி மற்றும் கலாஞ்சலி குழுமங்களின் நடன நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்தன! மதுரை வீதி போன்ற சந்தைக் கடைகளும், அலங்கரிக்கப்பட்ட புகைப்படச் சாவடியும் சங்க உறுப்பினர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன. நிகழ்ச்சியின் முடிவில் இருபத்தியைந்துக்கும் மேற்பட்ட பதார்த்தங்களுடன் வாழை இலை விருந்து பரிமாறப்பட்டது.





## மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம்

ஏப்ரல் 13, 2019 அன்று சுமார் 300 குடும்பங்களுடன் சித்திரைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மகளிரும் சிறுமியரும் மாவிளக்கு ஏந்தி உலா வந்தது கண்கவர் காட்சியாக இருந்தது. மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்க வானொலியின் [MTS RADIO] தொடக்கம் பற்றிய அறிவிப்பு, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு 2019 பேரவை பற்றிய தகவல் பகிர்ந்து கொண்டது விழாவின் சிறப்பு அம்சமாக விளங்கிற்று. மே 12 அன்று கோப்பேல் மற்றும் இர்விங் வட்டாரப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து சுமார் 30 குடும்பங்களுடன் கூட்டாஞ்சோறு விருந்து படைத்து, அன்னையருக்கு தங்களது குழந்தைகள் மூலமாக ரோஜா மலர் அளித்து, மகிழ்வித்து அன்னையர் தினத்தை அன்புடன் கொண்டாடினர்.





10) கமுடக்குடி மற்றும் அனந்ஜியூர் - இங்கு கிடைக்கப்பட்ட கல்வெட்டுக்கள் எவை?

அ) வட்டெழுத்து மற்றும் பிராமி ஆ) வட்டெழுத்து மற்றும் அரபிக். இ) சமஸ்க்ருதம் மற்றும் பிராமி
ஈ) சித்திர எழுத்து மற்றும் வட்டெழுத்து






## அட்லாண்டா மாநகர தமிழ்ச்சங்கம்

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் உலக மகளிர் தினத்தை மார்ச் 30, 2019 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அட்லாண்டாவில் வாழும் சிறந்த பெண் ஆளுமைகளை வரவழைத்து விழா சிறப்பாக வடிவமைக்கப்பட்டது. அட்லாண்டா மாநகருக்கு உட்பட்ட மேரியட்டா பகுதியில் தமிழ்ச்சங்கம், ஆரோக்கியத்திற்கான ஜார்ஜியா தன்னார்வலர் திட்டத்தின் (ஜார்ஜியா மக்கள் பொதுநலத் துறை) துணையுடன், மருத்துவ முகாம் ஒன்று மருத்துவர் கலை அவர்கள் தலைமையில் திறக்கப்பட்டுள்ளது.





## பாரதி கலை மன்றம், ஹூஸ்டன்

மே 18 ஆம் தேதி ஸ்ட்ராட்ஃபோர்டு உயர்நிலைப்பள்ளி அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்ற பாரதி கலை மன்றத் தமிழ்ப்பள்ளியின் ஆண்டு விழாவில் தமிழ்ப் பள்ளியின் ஐந்து மையங்களிலிருந்தும் சுமார் 250 மாணவ, மாணவிகள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். இவ்வாண்டு விழாவின் கருப்பொருளாக 'திருக்குறள்' எடுத்துக் கொள்ளப்பட்டது. திருக்குறளின் பெருமையை, ஒப்புவித்தல், இசை, நாடகம், நடனம் மற்றும் பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு, கோலாட்டம் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மூலமாக குழந்தைகள் அருமையாக எடுத்துரைத்தனர். போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு கோப்பைகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.




## ஜாக்ஸன்வில் தமிழ் மன்றம்

ஜாக்சன்வில் தமிழ் மன்றம், கடந்த சில மாதங்களாக அதன் உறுப்பினர்களுக்கு வலைப்பந்து, மேசைப்பந்து, சதுரங்கம் என பலவிதமான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் வென்றவர்களுக்கு கேடயங்களும், பதக்கங்களும் வழங்கியது.

மே 11 ஆம் தேதி ஜாக்சன்வில் தமிழ் மன்றம் அன்னையர் தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடியது. புகைப்படச் சாவடி, வேடிக்கை விளையாட்டுக்கள், பங்குபெற்ற அன்னையரின் சிறுவயது மற்றும் வளைகாப்பு புகைப்பட விளக்கக் காட்சிகளென பல்வேறு அம்சங்களுடன் அவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று, அனைவரின் மனங்களையும் கவர்ந்து பாராட்டுகளையும் பெற்றது.



11) கீழடிக்கு அருகில் உள்ள தூதை ஊரில் கிடைத்த இந்தக் கல்லில் காணப்படும் உருவம் எந்த மன்னரைச் சார்ந்தது?

அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன். ஈ) பல்லவன்

# சார்லட் தமிழ்ச்சங்கம்






சார்லட் தமிழ்ச்சங்கம் மார்ச் 31 அன்று, முதன் முறையாக, மகளிர் தின கொண்டாட்டத்தை நடத்தியது. மருத்துவர் திருமதி. குமாரி, வெகு அழகாகக் கலந்துரையாடல் நடத்தி, முக்கியமான மருத்துவக் குறிப்புகளைப் பகிர்ந்து கொண்டார். அட்லாண்டாவில் இருந்து "முழங்கு பறை" குழுவினரை வரவழைத்து பறை ஆர்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அடுத்ததாக மே 12 ஆம் தேதி சித்திரைத் திருவிழா அன்று, தன்னார்வலர்கள் தாமே சமைத்து 800-க்கும் மேற்பட்டவர்களுக்கு வாழை இலையில் விருந்து படைத்தனர். மேலும் செவிக்கு உணவாய், முத்தாய்ப்பாய் அமைந்தது "சொல் வேந்தர்" சுகி சிவம், "மொழி அழகி" பர்வீன் சுல்தானா, "நகைச்சுவை நாயகர்" மோகனசுந்தரம் அவர்களின் கருத்தரங்கம் நிகழ்ச்சி.

# ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கம்




ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் கடந்த ஏப்ரல் 20 அன்று சித்திரைத் திருநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாட்டியமும் அதனையடுத்து 'கவி படிப்பது' எவ்வாறு என்ற விளக்கப்பட உரையும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து "தமிழர் வரலாறு" என்ற தலைப்பில் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க முன்னாள் தலைவர் திரு. அகத்தியன் எனும் ஜான் பெனடிக்ட் அவர்களின் விளக்கப்பட உரை நிகழ்ந்தது. அதனையடுத்து அன்னாரது தலைமையில் "இல்லறம் நல்லறமாக விளங்கத் தேவையானது "இரும்புக் கட்டளையா? கரும்புச் சொல்லா?" என்ற தலைப்பினில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற்றது. இறுதியில் செயலாளர் திரு. முத்து நடராசன் அவர்கள் நன்றியுர வழங்க, புதிய செயலாளர் திரு. சுபாஷ் செல்வராஜ் அவர்களின் அறிமுகத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

# டென்னசி தமிழ்ச்சங்கம்





தமிழ் வருடப் பிறப்பை கொண்டாடும் விதமாக டென்னசி தமிழ்ச்சங்கம் நடத்திய சித்திரைத் திருவிழாவில் தமிழ்த் திரையுலக நடிகர் திரு. ஒய்.ஜி. மகேந்திரன் அவர்கள் தன் குழுவோடு '3ஜி' என்ற நாடகத்தை அரங்கேற்றி சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தார். சங்கத்தின் சட்ட வெளியீடு, முன்னாள் அமைச்சர் திரு. நெப்போலியன், தலைவி திருமதி. கவிதா சரவணன் குழுவின் முன்னிலையில் நடைபெற்றது. டி.என்.எஃப் தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள், அமைப்பின் செயல்பாடுகள் பற்றி உரை நிகழ்த்தினார். சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் தனித்தனியே நடத்தப்பட்ட சிக்கல் மற்றும் புள்ளிக் கோலப்போட்டிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு, பாரம்பரிய வாழை இலை விருந்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது.



12) கீழடியில் கிடைத்த இந்தக் கட்டிட அமைப்பு எதைக் காட்டுகிறது?

அ) சேமிப்புக் கலன் ஆ) உறை கிணறு. இ) படிக்கட்டு ஈ) வெளிச் சுவர்



## ரோட் ஐலண்ட் தமிழ்ச்சங்கம்

திருவள்ளுவர் ஆண்டு, 2050 வைகாசி மாதம் 4 ஆம் நாள் (மே 18, 2019) மதியம், ரோட் ஐலண்ட் தமிழ்ச்சங்க உறுப்பினர்களால், "சித்திரைத் திருவிழா" மற்றும் "கோடைக் கூடுகையாக" கொண்டாடப்பட்டது. ரோட் ஐலண்ட் வார்விக் நகரில் உள்ள கோடார்ட் நினைவுப் பூங்காவில் குடும்பத்துடன் கூடிய உறுப்பினர்கள், மே 18 தமிழினப் படுகொலையை நினைவுக்கூறும் விதமாக மௌன அஞ்சலியுடன் நிகழ்ச்சியைத் துவங்கினார்கள். பின்னர் பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டுகளுடனும், சிற்றுண்டியுடனும் நிகழ்ச்சி மகிழ்ச்சிகரமாக நிறைவுற்றது.

## டெலவர் பெருநிலத் தமிழ்ச்சங்கம்



2019 மே மாதம் 3ம் திகதி, தமிழ்ப் புத்தாண்டு விழா, டெலவர் பெருநிலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. லிடியன் நாதஸ்வரம் தனது இசைத்திறமையால் வந்தோரை வியக்க வைத்தார். அமெரிக்காவின் "மிகத் திறந்தவர்" விருது வென்றவரும், ஏ.ஆர். ரஹ்மானின் சீடரும் ஆன லிடியனின் பியானோ திறமை அனைவரும் அறிந்ததே. ஆனால் அவரது தபேலா வாசிப்பும், சகோதரி அமிருதவர்ஷணியின் மெய்மறக்க வைக்கும் குழலிசையும் இரண்டு மணி நேரங்களுக்கு டெலவர் பெருநிலத்தை இசையுலகின் உச்சியில், உணர்வுகள் மறைந்ததோர் உன்னத நிலையில் கட்டிப்போட்டன. இது லிடியனின் தமிழ்ச்சங்கங்களுக்கான முதல் நிகழ்ச்சி என்பது அழகுக்கு அழகு சேர்த்தது!



## கனெட்டிகட் தமிழ்ச்சங்கம்

மே மாதம் சனிக்கிழமை 4 ஆம் தேதி கனெட்டிகட் தமிழ்ச்சங்கத்தின் சித்திரை திருநாள் நுவீங்டண் நகரில் கொண்டாடப்பட்டது. இதில் உள்ளூர் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் இயல் இசை நாடக வடிவில் 32 நிகழ்ச்சிகள் தரப்பட்டன. இதில் 177 குழந்தைகளும் 44 வயது வந்தோரும் அடங்குவர். இந்நிகழ்ச்சிகளை அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த இரண்டாம் தலைமுறையினர் தொகுத்து வழங்கியது குறிப்பிடதக்கதாகும். மொத்தம் 5 மணி நேரம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கிட்டதட்ட எழுநூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.



13) கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் யாவை?

அ) வேட்டைக் கருவிகள் ஆ) எழுத்தாணி. இ) தந்தப் பொருட்கள் ஈ) கற்கருவிகள்




## மாநகர மில்வாக்கி தமிழ்ச்சங்கம்




மில்வாக்கி மாநகரத் தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் நீண்டகால விழைவான, வெளிச்சமூகத்திற்குத் தொண்டு செய்யும் நோக்கில், ஒரு நெடுஞ்சாலையைத் தேர்ந்தெடுத்துச் சுத்தம் செய்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியுடன் உறுப்பினர்கள் பங்குகொண்டு தொண்டு செய்தார்கள். மே 3 அன்று “வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு உள்ள சவால்கள்” என்கிற தலைப்பில் தமிழிலும் மற்றும் மே 4 அன்று ஆங்கிலத்திலும் மருத்துவர் திரு என். ஜெ. ஞானய்யா அவர்கள் உரையாற்றினார்கள். தமிழர்கள் மட்டுமல்லாது மற்ற இந்திய மாநிலத்தவர்களும் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சி, மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

## தமிழ் மக்கள் மன்றம் – நியூஹாம்ப்ஷயர்

தமிழ் மக்கள் மன்றத்தின் கோடைக் கொண்டாட்டத் திருவிழா, ஜூன் 2 ஆம் நாளில் நாஷுவா நோர்த் பள்ளி மைதானத்தில், “இளைஞர் ஒலிம்பிக்ஸ்” உடன் இனிதே நடைபெற்றது. 50-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டு தடகளம், நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல் போன்ற போட்டிகளில் பதக்கங்கள் வென்றனர். முன்னதாக நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில்



வெற்றி பெற்ற அணிகளுக்கு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. மன்றத்தின் கோடைக் கொண்டாட்டத் திருவிழா முழுவதும் தமிழ் மக்கள் மன்றத்தின் இளைஞர் அணியினரால் ஒருங்கிணைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



## மிச்சிகன் தமிழ்ச்சங்கம்

கடந்த சனவரி 17 ஆம் நாளில், கிராமிய மணம் தவழ சிறப்பாக நடைபெற்ற மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் ‘மண் மணக்கும் பொங்கல்’ விழாவில், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். ஆடல், பாடல், நாடகம், கிராமியப்பாட்டு, வில்லுப்பாட்டு, பறை இசையென விதவிதமாய் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. திரு. அமுதவாணன் தனது நகைச்சுவையால் அரங்கத்தை அசத்தினார். இவை எல்லாவற்றிக்கும் முத்தாய்ப்பாய் அமைந்தது இளம் சிறார்களின் தொகுப்புரை. தமிழ்ப்பணி, சமூகப்பணி, சிறந்த மாணவச் சாதனையாளர் எனப் பலவகையான விருதுகளும் வழங்கப்பட்டன. மார்ச் 24 மற்றும் ஏப்ரல் 28 தேதிகளில் ‘இலக்கியப் பட்டிமன்றம்’ மற்றும் ‘புத்தகச் சங்கமம்’ நிகழ்வுகளும் நடைபெற்றன. மார்ச் 30 அன்று நூலகத்தில் ‘தமிழில் கதை சொல்லும் நிகழ்ச்சி’ நடைபெற்றது.





14) கீழடியில் கிடைத்த இந்தத் தாயக் கட்டை எந்தப் பொருளால் செய்யப்பட்டது?

அ) சந்தனக் கட்டை ஆ) இரும்பு இ) செம்பு ஈ) தந்தம்.

## டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேசன்

இந்த இளவேனில் காலத்தில், டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் பல்வேறு நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தி முடித்தது. மார்ச் 17-ஆம் நாளில் நடந்த அறிவியல் கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டனர். வென்றவர்களுக்கு பரிசுகள், பரிசு கூப்பன்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஏப்ரல் மாதம் 6 ஆம் நாளில், டுவின் சிட்டீஸ் தமிழ் அசோடியேஷன் மற்றும் சேவா இணைந்து மருத்துவ முகாம் நடத்தின. ஏப்ரல் 7, 28 மற்றும் மே 7 தேதிகளில் டுவின் சிட்டீஸ் தமிழ் பாடசாலை சார்பில் தமிழ் அறிவுத் திறன் போட்டி நடைபெற்றது.




## தமிழ் சிநேகம் - தாம்பா, ப்ளோரிடா







ஏப்ரல் மாதம் 13 ஆம் நாள், சனிக்கிழமை முன் மாலைப் பொழுதில், தாம்பா நகரில் அமைந்திருக்கும் 'ஸ்காட்டிஷ் ரைற் மேசானிக் சென்டர்' உள்ளரங்கில் 'தமிழ் சிநேகம்' நடத்திய தமிழ்ப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் சுமார் 600-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். 200-க்கும் அதிகமான கலைஞர்கள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் இரவு விருந்துடன் விழா சிறப்பாக அமைந்தது. மே மாதம் 10 ஆம் நாள் மாலை, சிநேகம் தமிழ்ப் பாடசாலையில் பயின்ற 93 மாணவ மாணவியர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. மே மாதம் 11-ம் நாள் காலை சிநேகம் 'யூத் லீடெர்ஷிப்' பயிற்சிப் பட்டறையில் சேர்ந்து பயின்ற 15 மாணவ மாணவியர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.






## போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம்

போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம், மே மாதம் 19, 2019 அன்று நடத்திய, தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியில், புகைப்படச் சாவடி, உலன் நூலில், குத்து விளக்கோடு வடிவமைக்கப்பட்ட கோலம் என ஆரம்பித்து பின்னர், தலை வாழை இலையில் 17 வகையான அறுசுவை விருந்தும் வழங்கப்பட்டது. சொல்வேந்தர் திரு.சுகி சிவம் தலைமையில், மொழியழகி டாக்டர். பர்வீன் சுல்தானா, நகைச்சுவை நயாகரா திரு.மோகனசுந்தரம் அவர்களோடு உள்ளூர் திறமையாளர்கள 6 பேர் சேர்ந்து, “வெளிநாட்டு வாழ்க்கை திட்டமிட்ட பாதையிலா? திசை தெரியாமலா?” என்ற தலைப்பில் நடந்த நிகழ்ச்சியில் இரண்டு அணியினரும் அரங்கத்தைச் சிரிப்பலையில் சிலிர்க்க வைத்தார்கள். போர்ட்லண்ட் மன்ற வரலாற்றில் முதன் முறையாக 850-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## உங்களுக்குத் தெரியுமா விடைகள்:

1) அ; 2) அ; 3) அ; 4) இ; 5) இ; 6) அ; 7) ஈ; 8) ஆ: 9) அ; 10) ஆ; 11 ) இ; 12) ஆ; 13) ஆ; 14) ஈ




# MAKE GOOD GRADES #1 ON YOUR BACK TO SCHOOL LIST

**Eye Level's individualized approach to education will provide your child a critical advantage in the new school year and beyond.**

- 1-on-1 Academic Coaching
- Basic Thinking & Critical Thinking Math
- Reading Comprehension & Vocabulary
- Integrated Writing Program

Eye Level
I am the key.

**LEARN MORE TODAY**
**myeyelevel.com**

Algonquin: 224-678-9184
Arlingtonn Heights N.: 847-398-7188
Aurora E.: 630-364-1815
Bartlett: 630-213-7475
Bloomingdale: 630-307-7475
Bolingbrook W.: 630-708-7271
Buffalo Grove: 847-947-8700
Glenview: 224-521-0090

Gurnee: 224-521-0080
Hoffman Estates: 847-25-7400
Lake Zurich: 847-726-9900
Libertyville: 224-433-6726
Morton Grove: 224-770-7400
Mount Prospect: 224-735-2399
Naperville N: 630-444-7060
Naperville S: 630-355-3334

Northbrook: 847-559-0898
Palatine: 847-764-0058
Schaumburg N: 847-285-3446
Schaumburg S: 630-283-5960
Skokie: 847-983-7562
South Elgin: 630-847-4092
Westmont: 630-455-4470
Vernon Hils 847-327-0070

**Sundar Kuppuswamy**
**President**
**Federation of Tamil Sangams of North America**
**3825 Grey Rock Drive**
**Ellicott City, MD 21042**

PRESORTED
FIRST-CLASS MAIL
U.S. POSTAGE PAID
CHATTANOOGA, TN
Permit No. 422



